# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMMAM

## ANNUAL EXAMINATION - 2017-18

## TAMIL

**TIME - 3 HOURS** **CLASS – VII** **MAXIMUM MARKS - 80**

நேரம் - 3 மணி தமிழ் - ஏழாம் வகுப்பு மதிப்பெண்கள் - 80

---

## பகுதி –அ

**அ.கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளிக்க :-** 5 x 1= 5

ஓரிசாவில் பூரி என்ற நகருக்கு அருகில், கடற்கரையில் அமைந்துள்ள 'கொனார்க்' என்ற சூரியக்கோவில் முக்கியத்துவம் வாய்ந்தது. இதனைப் பார்க்க அயல்நாடுகளிலிருந்து தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகிறார்கள். கொனார்க், பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசன் நரசிம்ம தேவனால் கட்டப்பட்டது. இக்கோவில் 1200 சிற்பிகளின் கைவண்ணத்தில் 12 வருடங்களில் உருவாக்கப்பட்டது. 'கொனார்க்' என்பதற்கு சூரியனுடைய கோணம் என்பது பொருள்.

**வினாக்கள் :-**

1.கொனார்க் என்பது ____________

அ.பள்ளிக்கூடம் ஆ.பூங்காவனம்

இ.சூரியக்கோவில் ஈ.விளையாட்டு மைதானம்

2.' கொனார்க்' - இதனைக் கட்டியவர்

அ.நரசிம்ம குப்தன் ஆ.நரசிம்ம தேவன்

இ.நரசிம்ம வர்மன் ஈ.நரகாசுரன்

3.கொனார்க் என்பதன் பொருள் இது

அ.சூரியனுடைய கோணம் ஆ.சந்திரனுடைய கோணம்

இ.முக்கோணம் ஈ.அறுங்கோணம்

4.கொனார்க் அமைந்துள்ள இடம் ________________

அ.மலேசியா ஆ.சிங்கப்பூர் இ.ஒரிசா ஈ.கேரளம்

5.கொனார்க் இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் கட்டப்பட்டது.

அ.ஏழாம் நூற்றாண்டு ஆ.பத்தாம் நூற்றாண்டு

இ.பதினோராம் நூற்றாண்டு ஈ. பன்னிரண்டாம் நூற்றாண்டு

ஆ.பின்வரும் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க :-

5 x 1= 5

"மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்" என்று புலவர்களால் புகழப்பட்டவர் குணங்குடி மஸ்தான் சாகிபு. இவரின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிறு என்பதாகும். இவர், தம் இளவயதிலேயே முற்றும் துறந்தவராய் வாழ்ந்தார். சதுரகிரி, புறாமலை, நாகமலை, முதலிய மலைப்பகுதிகளுக்குச் சென்று, தனித்திருந்து ஞானம் பெற்றார். இவர், தாயுமானவரின் பாடல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். எனவே அவருடைய பராபரக்கண்ணியைப் போலவே ஓசைமிக்க இஸ்லாமிய பாடல்களை இயற்றினார். எக்காலக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலியன இவர் பாடிய வேறு சில கண்ணிகள் ஆகும்.

வினாக்கள் :-

1.குணங்குடி மஸ்தானின் இயற்பெயர் என்ன ?

2.குணங்குடி மஸ்தான் எம்மலைப்பகுதிகளுக்குச் சென்று ஞானம் பெற்றார் ?

3.யாருடைய பாடல்களால் இவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார் ?

4. குணங்குடி மஸ்தான் பாடிய கண்ணி பாடல்கள் எவை ?

5.புலவர்கள் குணங்குடி மஸ்தானை எவ்வாறு புகழ்கின்றனர் ?

இ.கடிதம் எழுதுக :- 1 x 6 =6

கோடை விடுமுறையைக் கழிக்க வருமாறு தோழன் / தோழிக்குக் கடிதம் எழுதுக.

ஈ.கட்டுரை எழுதுக. 1 x 8 =8

பொங்கல் விழா

## பகுதி –ஆ

இலக்கணம் :-

அ.தகுந்த சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக :- 3 x 1= 3

1.நிறப்பண்புப்பெயர்

அ. அன்பகம் ஆ. வெந்நீர் இ. செந்தாமரை ஈ. வானம்

2. காலப்பெயர்

அ. மைதானம் ஆ. தைத்திங்கள் இ. ஓடினான் ஈ. மைந்தன்

3. முதற்போலி

அ. அஞ்சு ஆ. மஞ்சு இ. பஞ்சு ஈ. மைஞ்சு

ஆ. <u>பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக</u> :- 3 x 1= 3

4. சொற்களின் இடையில் உள்ள எழுத்து மாற்றம் பெற்று அமைவது ______________

அ. முதற்போலி ஆ. இடைப்போலி இ. கடைப்போலி ஈ. முற்றுப்போலி

5. ஒரு பொருளின் பண்பினைக் குறிப்பது ____________

அ. பொருட்பெயர் ஆ. காலப்பெயர் இ. பண்புப்பெயர் ஈ. தொழிற்பெயர்

6. ஆறுமுகத்தான் என்பது ___________ பண்புப்பெயர்

அ. நிறப்பண்புப்பெயர் ஆ. அளவுப்பண்புப்பெயர்

இ. வடிவப்பண்புப்பெயர் ஈ. சுவைப்பண்புப்பெயர்

இ. <u>அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u>

3 x 1= 3

7. தீ வை (வழு நீக்கி எழுது)

அ. தீ மூட்டு ஆ. தீ பற்ற வை இ. தீ கொளுத்து ஈ. நெருப்பு வை

8. தருமன் உண்டேன் (எவ்வகை வழு)

அ. திணை வழு ஆ. கால வழு இ. இட வழு ஈ. பால் வழு

9. நிலம் (போலியாக்கு)

அ. நிலவு ஆ. நிலன் இ. நிலா ஈ. நிலமடந்தை

ஈ. <u>தகுந்த இலக்கணக் தோ குறிப்பைத்ந்தெடுத்து எழுதுக</u>. 3 x 1= 3

10. முன்றில்

அ. முதற்போலி ஆ. இடைப்போலி
இ. கடைப்போலி ஈ. முன்பின்னாக தொக்கப்போலி

11. புளிக்குழம்பு

அ. நிறப்பண்புப்பெயர் ஆ. அளவுப்பண்புப்பெயர்

இ. வடிவப்பண்புப்பெயர் ஈ. சுவைப்பண்புப்பெயர்

12. மாஞ்செடி

அ. மரபு வழு ஆ. மரபுச்சொல் இ. திணை வழு ஈ. விடை வழு

உ. <u>சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u> :- 3 x 1= 3

13. அ. பண்புப்பெயர் நான்கு வகைப்படும்.

ஆ. பண்புப்பெயர் ஐந்து வகைப்படும்.

இ. பண்புப்பெயர் ஆறு வகைப்படும்.

ஈ. பண்புப்பெயர் ஏழு வகைப்படும்.

14. அ. கடலில் இருப்பது நீரா? பாலா? – திணை வழு

ஆ. கடலில் இருப்பது நீரா? பாலா? – பால் வழு

இ. கடலில் இருப்பது நீரா? பாலா? – வினா வழு

ஈ. கடலில் இருப்பது நீரா? பாலா? – விடை வழு

15. அ. முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –இறுதிப்போலியைச் சாரும்.

ஆ. முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –இடைப்போலியைச் சாரும்.

இ. முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –முதற்போலியைச் சாரும்.

ஈ. முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –போலிகள் அல்லன.

## <u>பகுதி –இ</u>

அ. <u>பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u> :- 5 x 1= 5

1. தொழிற்சாலை வெளியிடும் புகையால் வரும் நோய்

அ. காலரா ஆ. பேதி இ. நுரையீரல் புற்று நோய்

2. இளந்தத்தனாரை சிறையிலிருந்து வெளி வர வாதிட்டவர் இவர்

அ.நலங்கிள்ளி ஆ.கோவூர் கிழார் இ.தெனாலிராமன்

3.பாண்டியரின் கொடியில் பொறிக்கப்பட்ட சின்னம்

அ.விற்கொடி ஆ.புலிக்கொடி இ.மீன்கொடி

4.நீதிநெறி விளக்கத்தின் ஆசிரியர் இவர்

அ.குமர குருபரர் ஆ.ஔவையார் இ.அதிவீரராம பாண்டியன்

5.அரிய செயலைச் செய்து முடிக்கத் தேவையானது இது

அ.விடா முயற்சி ஆ.உடல் வலிமை இ.சிறுமைக்குணம்

ஆ.<u>பொருள் கூறுக</u>.(இரண்டு மட்டும்) 2 x 1= 2

1.நெடிதுயர்ந்த 2.நெஞ்சுரம் 3.கிளைபோடு

இ.<u>எதிர்ச்சொல் எழுதுக</u>. .(இரண்டு மட்டும்) 2 x 1= 2

1.கவலை 2.பெருமை 3.நல்வழி

ஈ.<u>பிரித்தெழுதுக</u>. 2 x 1= 2

1.பெருந்தேர் 2.அறங்காக்கும்

உ.<u>சேர்த்தெழுதுக</u>. 2 x 1= 2

1.சிறுமை + உளி 2.நீர் + ஓடை

ஊ.<u>நிரப்புக</u>. 2 x 1= 2

1.வண்டுகள் ______________ எழுப்பும்.

2.கவளம் என்பதன் பொருள் __________________

எ.<u>எண் பெயர் எழுது</u>. 2 x 1 =2

(1) 2017 (2) 50,375

ஏ.<u>வேறுபாடு எழுதுக</u>. 2 x 1 =2

கலை - களை -

## பகுதி –ஈ

அ. ஏதேனும் மூன்றனுக்கு குறுகிய விடையளி. 3 x 2 =6

1. தொழிற்சாலைகள் வெளியிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

2. ஒரு செயலில் ஈடுபடுபவர் எவற்றைப் பொருட்படுத்த மாட்டார் ?

3. ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக்கூடாது. ஏன் ?

4. புலவர்கள் வாழ்க்கையைப்பற்றிக் கோவூர்கிழார் கூறியவை யாவை ?

5. போரை நிறுத்தக் கோவூர்கிழார் கூறிய காரணம் என்ன ?

ஆ. விரிவான விடையளி. 1 x 4= 4

மங்கை கண்ட இயற்கை வளம் பற்றிக் கூறுக.

அல்லது

சோழ நாட்டின் இரு பிரிவுகள் மற்றும் அவைகளின் மன்னரின் பெயரினை எழுதுக. அப்பாடத்தில் வரும் இளந்தத்தனார் பற்றி நீ அறிந்ததை எழுது.

இ. அடிமாறாமல் எழுதுக. 4+2 =6

1. ' வாங்கும் கவளத்து ' – எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப்பாடலை எழுதுக.

2. ' பணியுமாம் ' – எனத் தொடங்கும் குறளை எழுதுக. அல்லது

' செயல் ' – என முடியும் குறளை எழுதுக.

ஈ. துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 1 x 6 =6

விகடகவி தெனாலிராமன்

**************************